# கொழும்பில் இரண்டாயிரம் தமிழர்கள் கைது!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 6 இதழ் 337
யாழ்ப்பாணம் புதன்கிழமை 19-1-1994

(கொழும்பு)

கொழும்பில் கடந்த 17 நாட்களில் மட்டும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களும், யுவதிகளும் என்று தெரிவிக்கப்படுகிறது. இது வரை விடுதிகள், வாடகை வீடுகள் மற்றும் வீதிகளில் செல்லும் தமிழர்களையே பொலிஸார் கைதுசெய்து வந்தனர்.

தற்பொழுது பல ஆண்டு களாகத் தலைநகரில் வாழ்ந்து வந்தவர்களையும், பரம்பரை பரம்பரையாக கொழும்பில்

(2ம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடற்படை துப்பாக்கிசூடு இந்திய மீனவர் பலி

(சென்னை)

தமிழகம் புதுக்கோட்டைக் கடற்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்துக்கு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பலத்த கண்டனம் தெரிவித்ததுடன் இப்பிரச்சினை குறித்து மத்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சு நடாத்தி இந்தியக் கடலில் மீன் பிடிக்கும் மீனவர் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முடிவு காணவேண்டுமெனக் கோரியுள்ளார். (இ-ந)

★ பாதுகாப்புக் காரணங்களுக்காக

# கொழும்புதுறைமுகதென்பகுதி

# தடை வலயமாகப் பிரகடனம்!

## அரசு நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தின் தெற்குப் பகுதி முனையிலிருந்து கொள்ளுப்பிட்டி வரையிலான கடற்பிரதேசம் பாதுகாப்பு காரணங்களுக்காக தடை செய்யப்பட்ட பிரதேசமாக ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவினால் நேற்று பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தடை வலயத்தை ஏற்படுத்த அவசரகால விதிகள் அமுலில்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஐந்தாவது பிரிவின் கீழ் தடை செய்யப்பட்ட வலயத்தை ஏற்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகளைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இந்த ஒழுங்கு விதிகளின் பிரகாரம் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரை ஜனாதிபதி நியமித்தார்.

தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்து மூலமான அங்கீகாரம் இல்லாமல் எவரும் தடை செய்யப்பட்ட வலயங்களுக்குள் படகு அல்லது வள்ளம் மூலமாகவோ அல்லது வேறு எந்த வழிகளிலோ எக்காரணம் கொண்டும் செல்ல முடியாது. இதனை மீறும் எவரும் குற்றம் புரிந்தவராவர் கருதப்

[2-ம் பக்கம் பார்க்க]

## "படையில் எந்தப் பதவியும் இனிமேல் வகிக்கமாட்டேன்"

### விமானப் படைத் தளபதி பேட்டி

(கொழும்பு)

தொடர்ந்தும் தாம் பதவியில் நீடிப்பதால், பல வினரிடையே எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதென்றும் எனவும் மேலும் இனிமேல் பாதுகாப்பு படையில் எந்தவொரு பதவியினையும் வகிக்க விரும்பவில்லையெனவும், அடுத்த மாதம் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ள விமானப்படை தளபதி ஏயர் மார்ஷல் ரெரன்ஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது; எனது பதவிக்காலத்தில் போதுமான அளவு ரத்தம் சிந்தும் நிகழ்வுகளே

(4ம் பக்கம் பார்க்க)

## 4 எதிரணி எம். பி.க்களுக்கு நாடாளுமன்றம் செல்ல தடை

### சபாநாயகர் விதிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சியைச் சேர்ந்த நான்கு நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கு நாடாளுமன்றம் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு ஒன்றை தெரிவிக்கும்வேளையில் இவர்கள் நால்வரையும் தமது ஆசனங்களில் அமரும்படி சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது விடுத்த வேண்டுகோளுக்கு இவர்கள் செவிசாய்க்க மறுத்ததால் இந்த நால்வருக்கும் நாடாளுமன்றம் வருவதற்கு ஒரு வார காலம் இவ்வாறு தடைவிதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு புதிய தலைமை அதிகாரி நியமனம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் புதிய தலைமை அதிகாரியாக மேஜர்ஜெனரல் லக்கி அல்கம இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து நியமனம் பெற்றுள்ளார்.

இதேவேளையில் மூன்று பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளனர்.

லெப்டினன் கேணல் பதவிக்கும், கேணல் பதவிக்கும் மொத்தம் ஐவர் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-ந)

## சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்காத பேக்கரி உரிமையாளர் மீது கடும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர், பொது சுகாதாரப்பகுதியினர், காவல்துறையினர் ஆகியோர் கூட்டாக நேற்று நடாத்திய திடீர் சோதனையொன்றின் போது யாழ்நகர் பேக்கரி யொன்றில் பாண் தயாரிப்பதற்காக கோதுமை மாவினை அறையின் வெறும் தரையில் குழைத்து வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய செயன்முறைகள் எம் மக்களின் சுகவாழ்விற்கு தீங்கு விளைவிக்கும் என்பதினால் குழைக்கப்பட்ட மாவினை பாவனைக்கு விடாது அழிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஈழ அகதிகள் மீண்டும் 22ம் திகதி நாடு திரும்புவர்

(கொழும்பு)

நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கும் மற்றுமொரு தொகுதி அகதிகள் இம்மாதம் 22ம் திகதி தொடக்கம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 22ம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 11ம் திகதிவரை இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு 'இராமானுஜம்' என்னும் கப்பலில் இந்த அகதிகள் அனுப்பப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டது.

இந்த அகதிகள் அனைவரும் மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

கடந்த இரண்டு ஆண்டு

(2ம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. அதிகாரியின் யாழ். வருகை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு அதிகாரி கலாநிதி பீற்றர் நிக்கலஸின் யாழ். வருகை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரச்சினை காரணமாக இன்று வருகை தரவிருந்த இவர் அடுத்த வாரத்திலேயே யாழ்ப்பாணம் வருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் வருகை தரும் கலாநிதி நிக்கலஸ் மடு அகதிகள் விவகாரம் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேசவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கே-த)

## விளம்பரம்

### வெளிவந்து விட்டது

"எக்காளம்" கிறிஸ்தவ மாத இதழ்வெளி வந்துள்ளது. விபரங்களுக்கு: ஆசிரியர், எக்காளம், 491, கே. கே. எஸ். வீதி, நட்டாரதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (சி-734)

### மணமகன் தேவை

இந்து மதம் பூரட்டாதி நட்சத்திரம் செவ்வாய்குற்ற மற்ற படித்த 24 வயது பெண்ணுக்கு மணமகன் தேவை. G. V. Kanesalinkam. C/o Paramanatha, Uyarappulam, Anaikoddai. C 735

இந்து 41 வயது பூரம் 2, செவ்வாய் 4, பாவம் 13, பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு மணமகன் தேவை. வீடு உட்பட தகுந்த சீதனம் கொடுக்கப்படும் குறிப்புடன் முழு விபரங்களும் அனுப்பவும் இல. இ 730 மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். இ 730


## மருந்து விநியோகம்

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் உப அலுவலகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கடந்த வாரம் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆயுள்வேத மருந்துகள் வலிமேற்கு பிரதேச சபை நிர்வாகத்தினால் விநியோகிக்கப்பட்டுள்ளது. (72)

## மாதாந்த உதவிப்பணம்

(கோப்பாய்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறு பவர்களுக்கு கடந்த ஐந்து மாத காலமாக உதவிப்பணம் வழங்கப்படவில்லை.

நல்லூர், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ளவர்களுக்குச் சென்ற கார்த்திகை மாதம் வரை பணம் வழங்கப்பட்டது.

# தமிழக அரசை கலைக்குமாறு வாழப்பாடி கோரிக்கை

(சென்னை)

தமிழக அரசைக் கலைத்து விட மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு வாழப்பாடி ராமமூர்த்தி வற்புறுத்தியுள்ளார்.

தமிழக அரசின் முறைகேடுகள் அடங்கிய மனுவொன்றை காங்கிரஸ் (ஐ), எம். ஜி. ஆர். அ. தி மு. க, ஜனதா கட்சி, இந்திய ஐக்கிய பொதுவுடமை கட்சி மற்றும் மூன்று கட்சிகள் அடங்கிய பிரதிநிதிகள் குழு குடியரசுத் தலைவரிடமும், பிரதமரிடமும் சமர்ப்பித்துள்ளதாகவும் திரு. வாழப்பாடி தெரிவித்தார்.

இதேவேளை தமிழக முதல்வருக்கும் தமிழக ஆளுநருக்குமிடையிலான பனிப்போர் தீவிரமடைந்து வருவதாகவும் தமிழக முதல்வரின் எதேச்சாதிகாரம் அதிகரித்து வருவதாகவும் பல கட்சித் தலைவர்களும் கூறியுள்ளனர். -சி

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடாத்தப்படும் வதிவிட வேளாண்மைப் போட்டியானது யாழ். மாவட்டத்தில் கூடுதலாக மழைவீழ்ச்சி காணப்பட்டதன் பிரகாரம் இம்மாதம் 31ம் தேதி வரை விண்ணப்ப முடிவுதிகதி போட்டியாளர் நலன்கருதி நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் பார்வையிடற் காலம் முதலாம் கட்ட பார்வையிடல் 01-03-94 முதல் 20-03-94 வரையான காலப்பகுதியினுள் நடைபெறும்.

## தமிழக ஆளுநருக்கு கொலைப் பயமுறுத்தல்

(சென்னை)

தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி மீது கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

சென்னையில் எம். ஜி. ஆரின் 77 வது பிறந்த நாள் நினைவு கொண்டாட்டங்கள் நேற்று பரந்த அளவில் கொண்டாடப்பட்டன.

இதற்கு தமிழக ஆளுநரும் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் அதில் கலந்து கொள்ளச் செல்லவில்லை.

தமிழக ஆளுநர் மீது கொலைப்பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. அதனால் அவர் இந்த விழாவில் கலந்து கொள்வது உசிதமல்ல என்று இந்திய மத்திய அரசு அவருக்கு அறிவித்ததாக ஏஜென்சி செய்திகள் மேலும் தெரிவித்தன. (வி-இ)

## தமிழக முதல்வர் - ஆளுநர் கருத்துவேறுபாடு மாநில நலனுக்கு உகந்ததல்ல

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கும் ஆளுநர் சென்னாரெட்டிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் மாநிலத்தின் நலனுக்கு உகந்ததல்ல என்று காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜி. கே மூப்பனார் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் பத்திரிகையாளர் மத்தியில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். -ச

## புதிய பங்கீட்டு அட்டை

(ஆனைப்பந்தி)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படுகின்றன.

மக்களிடமிருந்து பழைய அ. இ. உ அட்டைகள் பெறப்பட்டு அவற்றிற்கு பதிலாக புதிய அட்டைகள் மேற்படி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வழங்கப்படுகின்றன. (101)

## சுப்பிரமணிய சுவாமியின் குற்றச்சாட்டு பொய்யானது

(புதுடில்லி)

தமிழ்நாடு ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி வெளியில் நடமாட முடியாதவாறு தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி குறிப்பிட்டது உண்மைக்குப் புறம்பானது.

இவ்வாறு மத்திய அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் தமிழகத்தில் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார். ஈ-கி

## ஓய்வூதிய வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த றெயில்வே திணைக்கள ஊழியர்களினதும் உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்களினதும் கடந்த டிசம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் உரியவர்களுக்கு யாழ். கொழும்பு ஓய்வூதியப்பிரிவினரால் நேற்று 18ந் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (71-ரி)

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டி இந்து மயான பரிபாலனசபையின் ஆண்டுப்பொதுக் கூட்டம் இன்று 19ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4-30மணிக்கு சபைத்தலைவர் திரு. ம. சுந்தரலிங்கம் தலைமையில் யாழ். ஈச்சமோட்டை சனசமூக நிலையமண்டபத்தில் நடைபெறும். (154)

0 0

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சிவராணி தலைமையில் நடைபெறவுள்ளது. -72

## தூதரகம் திறப்பு

(கொழும்பு)

சவுதி அரேபிய தூதரக ஆலோசகர் அலுவலகம் இவ்வாண்டு நடுப்பகுதியில் கொழும்பில் திறக்கப்படும் என சபாநாயகர் எம். எச். முகம்மது தெரிவித்துள்ளார். ஈ-இ)

## கொழும்பில்

(1-ம் பக்கம் பார்க்க)

வசித்து வந்தவர்களையும் பொலிஸார் கைதுசெய்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் ஆதரவில் வயாவிளான் மைதானத்தில் தெரிவு செய்யப்பட்ட கழகங்களிடையே யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் கழகத்தை எதிர்த்து அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் மோதும். -வி- இ

## ஈழ அகதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் இந்தியாவிலிருந்து 36 ஆயிரம் அகதிகள் நாடுதிரும்பியுள்ளனர். இவர்களும் 26 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர் (இ-ரி)

## தடை வலயத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த:

இந்த ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர், ஆயுதப்படைகளின் உத்தியோகஸ்தர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்டவர் தடை செய்யப்பட்ட பகுதிகளுக்கு செல்லும் படகோ வள்ளம் அல்லது எந்த ஒரு நபரையும் தடுத்து நிறுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார்.

ஒழுங்கு விதிகளை மீறும் எந்த ஒரு படகு மீதும் அல்லது நபர் மீதும் சுடுவதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (இ-ரி)

## கடற்றொழிலாளருக்கு வலை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நினைவாக பரவலாக தீவகம், காரைநகர், தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கடன் அடிப்படையில் வலைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இத்தொடரில் கடந்த 6ம் திகதி வடமராட்சி கிழக்கு ஒன்றியஅலுவலகத்தில் பொற்பதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தையும் மருதங்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தையும் சேர்ந்த 16 பயனாளிகளுக்கு வலைகள் கடன் அடிப்படையில் விநியோகிக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடற்புலிகள் மாவட்ட இணைப்பாளர், அதன் மைச் செயலக பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இத்துடன் பெருந்தொகையான கடற்றொழிலாளரும் பங்குபற்றினர்.


# வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அச்சகமொன்றிற்கு கீழ் காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) இயந்திர இயக்குனர்
(2) அச்சுக் கோப்பாளர்
(3) அச்சக முகாமையாளர்
(4) கணக்குப் பதிவாளர்
(5) ஒப்புநோக்குனர்

★ மூன்று வருடங்களுக்குக் குறையாத வேலை அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


தகுதியுடையவர்கள் விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் கீழ் காணும் முகவரிக்கு 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ம் நாள் காலை 9-00 மணிக்கு நடைபெறவிருக்கும் நேர்முகத்தகுதிகாண் தேர்வுக்கு வருகை தரும்படி வேண்டுகொள்கின்றோம்.

ஃ நேர்முகத் தகுதிகாண் தேர்வுக்கு வருகை தர வேண்டிய முகவரி:

வருவாய்ப் பகுதிச் செயலகம்
நிதித்துறை,
பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (எ-3773)



## நெஞ்சைவிட்டகலா ஓராண்டு நினைவலைகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 3 |  | 14 |
| - | | - |
| 11 | | 01 |
| - | | - |
| 59 | | 93 |

அமரர் சிவபாதம் செல்வம்

திதி: 19-01-1994 (இன்று)

★ ஆத்மாசாந்திக்காக பிரார்த்திக்கிறோம் ★

உன் பிரிவால் துயருறும்
தந்தை, தாய், தங்கையர்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

88/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (இ-736)

# ★ இதுவரை காலமும் மட்டு. மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை

(மட்டுநகர்)

மட்டு மாவட்டத்தில் அண்மையில் பெய்த பெருமழையினாலேற்பட்ட வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை வெள்ள நிவாரணம் வழங்கப்படவில்லை

இறிலங்கா அரசு இதற்கான நிதியை வழங்காததினாலேயே நிவாரணம் வழங்க முடியவில்லையென அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிதி தருமாறு பிரதேச செயலாளர்கள் சமூக சேவைகள் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனினும் உரிய பலனேதும் கிட்டவில்லையென தெரிய வருகிறது.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் ஏழாயிரம் குடும்பங்களும் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் ஐயாயிரம் குடும்பங்களும் ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவில் மூவாயிரம் குடும்பங்களும் வெள்ளப்பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். (சி)

# புடவைத் திணைக்களத்தின் யாழ். பிரிவுக்கு மூடுவிழா

(மானிப்பாய்)

யாழ் செயலகத்தில் இயங்கி வந்த புடவைக் கைத்தொழில் திணைக்களப் பிரிவு மூடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் பணிபுரிந்த 25 ஊழியர்களும் வடக்கு கிழக்கு மாகாண சபையினால் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். செயலகத்தின் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலைத் தொடர்ந்து இப்பிரிவு இவ்மாதம் சுபாஸ் ஹோட்டலில் இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது (71-சி)

**சுகாதார விதிகளை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதுடன் பேக்கரி உரிமையாளர் மீதும் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகள் சுகாதாரப்பகுதி தெரிவித்துள்ளது.

தொற்றுநோய்கள் அதிகரித்துக் காணப்படும் இன்றைய சூழ்நிலையில் பொதுமக்களின் சுகவாழ்விற்கு பாதகமான இத்தகைய செயற்பாடுகளை இலாபநோக்குடன் உணவு தயாரிப்பு, மற்றும் விநியோகத்தில் ஈடுபடும் சகல தரப்பினரும் பொது சுகாதாரத்தினை இறுக்கமாகக் கடைப்பிடித்துப் பொறுப்பான முறையில் நடந்து கொள்ளுமாறும் தகுதிவாய்ந்த அதிகாரிகள் உரிய முறையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர். -சி

# ★ பூநகரி முகாம் வீழ்ச்சி குறித்து இராணுவத் தரப்பினர் மீது மேலும் பல குற்றச்சாட்டு

(கொழும்பு)

பூநகரி கூட்டுப்படைத்தளம் வீழ்ச்சியினையடுத்து ராணுவத் தரப்பினர் மீது பல குற்றச்சாட்டுக்களை விசாரணைக்குழு சுமத்தியுள்ளது.

விடுதலைப்புலிகள் முகாம் மீது தாக்குதல் நடத்தவுள்ளனர் என ராணுவ புலனாய்வு துறையினரின் எச்சரிக்கையை அலட்சியம் செய்தமை!

முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்த பின்னர் மேலதிக படையினரை அங்கு அனுப்புவதற்கு எடுத்த காலதாமதம்!

தாக்குதலின்போது புலிகள் அணி திரள்வதனை அவதானிக்காமை;

பாரிய இடைவெளிகளில் பாதுகாப்பற்ற காவலரண்களை அமைத்துக்கொண்டமை என மேலும் பல குற்றச்சாட்டுக்களை விசாரணைக்குழு சுமத்தியுள்ளது. (கே-சி)

## மண். கோட்ட ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தினுள் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தமிழ் மொழி, சமூகக் கல்வி, ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்குகளில் பங்குகொண்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோட்டப் பணிமனையில் வழங்கப்படும். -சி

## நில நடுக்கம் 30 பேர் பலி

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் கலிபோர்ணியா மாநிலலொஸ் ஏஞ்சல் நகரத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் இறந்தோரின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது

நேற்றுமுன்தினம் அதிகாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஆயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்து தவிப்பதாகவும் பலர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. -கே-சி

# தொழில் நுட்பக் கல்விப் பிரிவு திணைக்களமாக மாற்றம்

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சின்கீழ் இயங்கும் தொழில் நுட்ப கல்விப் பிரிவு ஒரு திணைக்களமாக மாற்றப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப கல்லூரிகளை அபிவிருத்திக்கு உகந்த முறையில் பார்த்தல் ஒரு தொழில் துறைக் கல்வியாக நாடு முழுவதிலும் பிரபல்யப்படுத்துதல் என்பன இந்தப் புதிய திணைக்களத்தின் பொறுப்புக்கள் சில வாகும்.

நாட்டில் தொழில்நுட்ப கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஆண்டுடன் நூறு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன.

பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தொழில் நுட்ப மத்திய நிலையங்களை ஆரம்பித்து இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் தொழில் நுட்ப அறிவை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (சி)

# அரச ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா முற்பணம்

(மானிப்பாய்)

பாடசாலை மாணவர்களின் உபகரணங்கள் வாங்குவதற்கென அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் விசேட வங்கி முற்பணம் ரூபா 1000/- ஆயிரம் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படுகின்றது.

இதேவேளை யாழ். செயலக ஊழியர்கள் இப்பணத்தினைப் பெறுவதற்கு இதற்கான சுற்று நிருபம் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (71-சி)

# ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த படி இம்மாதம் வழங்கப்படும்

(கொழும்பு)

1994-ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிட்டவாறு 1985-ம் ஆண்டுக்கு முன் ஓய்வூதியம் பெற்றவர்களுக்கு 01-01-94 தொடக்கம் அதிகரிப்புபடி வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு வழங்குவதற்கான சுற்று நிருபமொன்றை ஓய்வூதிய ஆணையாளர் நாட்டிலுள்ள சகல மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

சுற்று நிருபப்படி 1500 ரூபா வரை ஓய்வூதியமாகப் பெறுவோர் 100 ரூபாவும், 1501 — 2000 ரூபா வரை ஓய்வூதியம் பெறுவோர் 125 ரூபாவும் 2001 — 4500 ரூபா வரை ஓய்வூதியம் பெறுவோர் 100 ரூபாவும், 4501—5000 ரூபா வரை ஓய்வூதியம் பெறுவோர் 125 ரூபாவும் 5001—5500 ரூபா வரை ஓய்வூதியம் பெறுவோர் 150ரூபாவும், 5501 — 6000 ரூபாவரை ஓய்வூதியம் பெறுவோர் 175 ரூபாவும் 6001 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பெறுபவர்கள் மாதாந்தம் பெறுவர். [வ-சி]

**படையில்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவித்துள்ளேன். வாழ்நாளில் பெருமளவிலான காலங்களை விமானப்படையிலேயே கழித்துள்ளேன்.

எனது குடும்பத்துடன் வெளிநாடு ஒன்றில் வாழ்வதனையே விரும்புகிறேன். வர்த்தகரவுக்கான தூதுவராகப் பணியாற்றவே நான் விரும்புகிறேன். இதனை இலங்கை அரசே முடிவு செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (கே-சி)

# ★ இராஜாங்க அமைச்சர் ரணசிங்காவுக்கு எதிராக ஐ. தே. க. விசாரணை

(கொழும்பு)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு அபகீர்த்தியை உண்டு பண்ணும் வகையில் கூட்டங்களில் உரையாற்றியது உட்பட பல குற்றச்சாட்டுகள் தொடர்பாக தகவல் துறை இராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா மீதான விசாரணையை ஐ. தே. கட்சி இம்மாதம் 26-ம் திகதி மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ஜே. ரணசிங்கா மீதான விசாரணையை இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஸி. நந்தா மத்தியூ, நெசவுக்கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். டி. ஏ. குணதிலக்க, சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் ஆகியோரர் அடங்கிய குழு மேற்கொள்ளவுள்ளது

திரு. ரணசிங்காவிற்கு ஏற்கனவே குற்றச்சாட்டுகள் அனுப்பப்பட்டு அவற்றிற்கு எழுத்து மூலமாக பதில் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் ஐ. தே. வட்டாரங்கள் தெரிவித்தன.

**4 எதிரணி**

(1-ம பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற எம். பி.க்களின் தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் 25லட்சரூபா நிதி எதிர்க்கட்சி எம். பி.க்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையென தெரிவித்து எதிர்க்கட்சி எம். பி.க்கள் தமது எதிர்ப்பை நாடாளுமன்றத்தில் தெரிவித்தனர்.

இதனால் நாடாளுமன்றத்தில் ஒருகுழப்பநிலை ஏற்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் சபையைப் பார்த்து எம். பி.க்களை தமது ஆசனங்களில் அமருமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த வேண்டுகோளை சம்பந்தப்பட்ட நால்வரும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

இதனைத் தொடர்ந்து இந்த நான்கு எம். பி. க்களும் நாடாளுமன்றம் வருவதற்குக் கால அவகாசமின்றி தடைவிதிக்கப்பட்டதுடன் வெளிக்கின் சபையிலிருந்து வெளியேறுமாறும் சபாநாயகர் உத்தரவிட்டார்.

எனினும் அவர்கள் நால்வரும் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற மறுத்தனர். இதனால் அவர்கள் நால்வரும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியே தூக்கிச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இ-சி

# ஐ. தே. க. தொடர்ந்து குழப்ப நிலையில்!

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சர் அநுரபண்டாரநாயக்கா பதிதேசம பகுதியில் கலந்து கொண்ட பொதுக்கூட்டம் ஒன்றில் குழப்பம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் கொங்கல சுதந்திரவர்த்தகவலயத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கலந்து கொண்ட போது அங்கு எதிர்பார்த்ததனைவிட மிகக் குறைவான பொதுமக்களே கலந்து கொண்டதாகவும் கூறப்பட்டது

இந்தஇரண்டு சம்பவங்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத்தை குழப்பநிலைக்குத் தள்ளியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்மாகாண சபையின் கடத்தப்பட்ட அங்கத்தவர் பிரான்சிஸ்கூ என்பவரை தென்மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக நிறுத்துவதா இல்லை என்பது பற்றியும் ஐ. தே. க குழம்பிக்கொண்டிருப்பதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

திரு. அனுரா பண்டாரநாயக்காவும், திரு. பிரான்ஸிஸ் கூவும் ஐ. தே கட்சியில் இணைந்து கொண்டதால் எத்தகையமான பயனும் கட்சிக்கு ஏற்படவில்லையெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. -இ-சி

**பாதுகாப்பு**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான அவசரகாலச் சட்டப் பிரமாணங்கள் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதியினால் பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றது. அனுமதியின்றி இக்கடற் பிரதேசத்தில் பிரவேசிக்கும் நபருக்கோ அல்லது கடற்பிரயாண சாதனங்களுக்கோ எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்து மூல அனுமதியின்றி இந்தக் கடற்பிரதேசத்தில் எந்த ஒரு காரணத்திற்காகவும் பிரவேசிக்க முடியாது. இவ்வாறு பிரவேசிப்பவர்களுக்கு எதிராக அவசரகாலப் பிரமாணங்களின் கீழ் வழக்குத் தொடரப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. -சி

# கிரிக்கெட் போட்டி இந்தியா 3-269

(புதுடில்லி)

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையில், லக்னோவில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 269 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்றைய ஆட்டம் முடிவடையும்போது, இந்திய கோஷ்டியின் கப்டன் அஸாருதீன் 20 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் 88 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தார்கள்.

இந்தியகோஷ்டியின் ஆரம்ப துடுப்பாட்டக்காரரான, சித்து மிகச்சிறப்பாக துடுப்பெடுத்தாடி 124 ஓட்டங்களை எடுத்தார். இதில் 8 சிக்ஸர்களும் 9 பவுண்றிகளும் அடங்கும், மனோச் பிரபாகர் வினோத் கம்ளி ஆகிய இருவரும் முறையே 21, 05 ஓட்டங்களைப் பெற்றனர். (வி-இ-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B